
# துறவி லாரென்ஸ்



ராஜாஜி

சிறு
348

# துறவி லாரென்ஸ்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

சம்பா நூலகம்
59, பிராட்வே சென்னை-1.

முதற் பதிப்பு : நவம்பர், 1957

விலை அரை ரூபாய்

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, இராயப்பேட்டை, சென்னை—14.

# ஆசிரியர் குறிப்பு

இந்தச் சிறு நூலில் துறவி லாரென்ஸ் சொன்னதாக நான் எழுதியிருப்பது அனைத்தும் இங்கிலாந்தில் *Pater Noster, Series No. 13.* பாட்டர் நாஸ்டர் 13-வது வெளியீடு. *Burns Oates, Wash Bourne* - பர்ன்ஸ் ஓட்ஸ், வாஷ் போர்ன் - இந்தக் கம்பெனியில் பிரசுரமாகிய நூலினின்று எடுத்து எழுதப்பட்டது. இந்தச் சிறு நூலை முதலில் கல்கியில் தொடராக எழுதினேன். விஷயம் அறியாத சில கிறிஸ்தவ நணபர்கள் என்னுடைய சொந்தச் சரக்கைத் துறவி லாரென்ஸ் வாயில் புகுத்தியிருக்கிறேன் என்று எண்ணி எனக்கு எழுதினார்கள். அது முற்றிலும் தவறு. கிறிஸ்தவ பக்தர்கள் பிரசுரித்திருக்கும் நூலிலிருந்து ஏதும் மாற்றிவிடாமல் தமிழ்ப் படுத்தி யிருக்கிறேன்.

—ராஜாஜி

# முன்னுரை

சர்வ சமய சமத்துவ நெறியை நமக்குக் காந்தியடிகள் காட்டினார். அதற்காகவே தம் உயிரையும் அர்ப்பணம் செய்துவிட்டார். அவர் தந்த அந்த மாற்றறியாத பசும் பொன்னைக் காத்து உய்வோமாக.

எந்தத் தேசத்திலும் எந்தக் காலத்திலும் எந்த மதத்தினரிலும் சில ஜீவன் முக்தர்கள் தோன்றி விளக்கு அணையாமல் காத்து வந்திருக்கிறார்கள்.

லாரென்ஸ் என்ற கிறிஸ்துவத் துறவி இன்றைக்கு முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்தவர். பூரண ஞானம்பெற்ற முனிவராகச் சாதாரண மனிதனுடைய வடிவத்தில் விளங்கினார். அவருடைய குணாதிசயங்களையும் உபதேசங்களையும் நம்முடைய நாட்டுப் பரம்பரை மார்க்கத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் படித்து அறிவது மிக நன்மை தரும்.

ஈசுவரன் இருக்கிறான் என்று நம்பி அனைவரும் அவனுக்கு வழிபாடு செலுத்துகிறோம். இது போதாது, போதவே போதாது என்பதற்குச் சான்று உலகத்தில் இன்னும் நடந்து வரும் பாவங்களே போதும். வழிபாட்டுடன் பல அப்பியாசங்

களைப் பெரியோர்கள் சொல்லியும் செய்தும் காட்டியிருக்கிறார்கள். இந்தப் பலவித அப்பியாசங்களைத் தான் 'யோகம்' என்பார்கள். ஞான யோகம், தியான யோகம், கர்ம யோகம், ராஜ யோகம், பக்தி யோகம் என்றெல்லாம் யோக முறைகளுக்குப் பெயர்கள் உண்டு.

கிறிஸ்துவத் துறவி யொருவர் கூட்டுறவு யோகம் என்று ஒரு முறையைத் தானும் அப்பியாசம் செய்து பிறருக்கும் உபதேசித்தார். வாழ்க்கையில் எந்தச் சமயத்தில் எந்தப் பெரிய அல்லது சிறிய வேலை செய்துகொண்டிருக்கும்போதும், ஆகார விகார வேளைகளிலும், சதா ஈசன் நமக்குத் தகப்பனாகவும், தாயாராகவும், தோழனாகவும் பக்கத்திலேயே இருந்து வருகிறான் என்பதை யுணர்ந்து, அவனுடன் கூட்டுறவு வாழ்க்கை நடத்தலாம் என்பது லாரென்ஸ் துறவியின் உபதேசம். ஈசனை நமக்கு நெருங்கிய தோழனாக எப்பொழுதும் கூடவே இருக்கும்படி செய்து கொள்ளும் சக்தி நமக்கு உண்டு. தீவிர அன்பைச் செலுத்தி அவனை அழைத்துப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தலாம். இந்தக் கூட்டுறவைச் சம்பாதிப்பதே லாரென்ஸ் துறவியார் போதித்த மார்க்கம்.

" பிழை செய்துவிட்ட காலத்தில் அன்போடு அழைத்தால் பெற்ற தாயைப்போல் அவன் பக்கத்தில் வருவான். அருள் பொழிவான். நீ

எடுக்கும் ஒவ்வொரு முயற்சியிலும் தைரியம் தரும் அண்ணனாகவும், கூட உழைக்கும் தம்பியாகவும், வழிகாட்டி நடத்தும் தந்தையாகவும் உனக்கு உதவி செய்யப் பகவான் எப்போதும் காத்திருக்கிறான். உள்ளம் நிறைந்த அன்போடு அழைத்தால் வருவான். உன்னோடு அவனும் சேர்ந்து உழைப்பான்" என்று கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் தாமும் செய்து பிறருக்கும் உபதேசித்தார்.

பால் மாறாத குழந்தை தாயை ஒட்டிக் கொள்ளுவது போலும், மேலே ஏறிப் படரும் கொடி கொம்பை அணைத்துக் கொள்வது போலும் ஆண்டவனை ஒட்டிக்கொண்டு சிறியதும் பெரியதுமான காரியமும், ஓய்வும், விளையாட்டும் எல்லாம் அவனோடு சேர்ந்து செய் என்றார் அந்த ஞானி.

இது ஞான மார்க்கமா, கர்ம யோகமா, பக்தி மார்க்கமா அல்லது தியானமா என்று வேதாந்திகள் ஆராய்ந்து வகுத்துச் சொல்லலாம். ஞானத்தில் முளைத்துப் பக்தியில் வளர்ந்து, கர்மமும் ஞானமும் ஒன்றாகப் பிணைந்த மார்க்கம், அதாவது கண்ணன் காட்டிய வழியே என்றும் வைத்துக் கொள்ளலாம்.

**" யத் கரோஷி, யத்அசஞஸி யத்ஜுஹோஷி ததாஸியத்**
**யத் தபஸ்யஸி கௌந்தேய தத் குருஷ்வ மதர்ப்பணம்**

என்று கீதையில் சொல்லப்பட்ட மார்க்கம் இதுவேயாகும்.

நான் தமிழாக்கித் தரும் இந்தக் கிறிஸ்துவ முனிவருடைய சிந்தனைகளும் அருள்மொழிகளும், படிக்கும்போது ஆங்காங்கு உபநிஷத் பகவத் கீதை மந்திரங்களும், ஆழ்வார்கள் நாயன்மார்கள் வாசகங்களும் நினைவுக்கு வரலாம். அவற்றை யெல்லாம் குறித்து எழுதலாம். ஆனால், அப்படி ஏன் செய்ய வேண்டும்? உலகத்தில் எந்த நாட்டில் தோன்றிய ஞானிகளும் பக்தர்களும் ஒரே மெய்ப் பொருளைத்தான் காண்கிறார்கள். அவர்களுடைய சிந்தனைகளும் உபதேசங்களும் ஒன்றாகத்தான் இருக்கும். தத்தம் மக்களுக்குத் தத்தம் மொழியில் சொல்லியிருக்கிறார்கள். இதுவெல்லாம் நம்முடைய சாஸ்திரங்களிலேயே இருக்கிறது என்று எடுத்துக் காட்டிப் பெருமைப்படுவதில் என்ன பயன்?

நம்முடைய சாஸ்திரங்களில் இருப்பதை உணர்ந்து **நடந்து** வந்தோமானால் அதுவல்லவோ பெருமைப்படுவதற்குக் காரணமாகும். அது வல்லாமல் நம்முடைய பெரியோர்களைக் காட்டிக் கர்வப்படுவதில் பயன் இல்லை.

எல்லாச் சமயங்களும் பராசக்தியை நோக்கிச் செல்கின்றன. எல்லாப் பக்தர்களும் ஆண்டவனை அனுபவித்துப் பாடியும் போதித்தும் வந்திருக்கிறார்கள். நாமும் அடக்கத்துடன் பகவானுக்கு உள்ளத்தில் இடம் தந்து, பக்தி செலுத்தி அவனை இதயத்தில் நிறுத்திக்கொள்வோமாக.

# 1

லாரென்ஸ் துறவியின் காலத்தில் கத்தோலிக் என்றும் நவீன மார்க்கம் என்றும் கிறிஸ்தவர்களில் பேதமில்லை. எல்லோரும் கத்தோலிக்கர்களாகவே இருந்து வந்தனர். கார்மேல் துறவி மடத்தில் லாரென்ஸ் என்பவர் தீட்சை பெற்ற துறவிகளுக்குப் பரிசாரகம் செய்து வந்தார். இந்தப் பரிசாரகனுடைய குணமும் ஞானமும் பக்தியும் மிகப் புகழ் பெற்றுப் பரவிற்று. பல பெரியோர்கள் அவரைக் கண்டு பேசியும் உபதேசம் பெற்றும் வந்தனர். அப்படி உறவாடிய சிலர் எழுதி வைத்த குறிப்புக்களிலிருந்தும், லாரென்ஸ் எழுதிய நான்கைந்து கடிதங்களிலிருந்துமே துறவி லாரென்ஸைப் பற்றி நமக்குத் தெரிய வருவதெல்லாம்.

இவர் பிறந்த வருஷம் சரியாகத் தெரியவில்லை. கி. பி. 1611-ம் ஆண்டாக இருக்கலாம் என்று மட்டும் தெரிய வருகிறது.

பிரான்ஸ் தேசத்தில் லொரேயின் என்கிற பிரதேசத்தில் ஒரு கிராமத்தில் தெய்வ பக்தியோடு வாழ்ந்த ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்தார். இவருடைய பெயர் நிக்கோலொஸ் ஹெர்மன். கார்மேல் ஆசிரமத்தில் சேர்ந்தபோது அவருக்கு அங்கே லாரென்ஸ் என்கிற பெயர் தந்தார்கள். பதினெட்டாவது வயதில் சிப்பாயாக ராணுவத்தில் சேர்ந்து காயமடைந்தபடியால், அந்த உத்தியோகத்தை விட்டுவிட்டுப் பிரெஞ்சு ராஜ்ய கஜாணு அதிகாரி வீட்டில் சாதாரணக் குற்றேவல் புரியும் சேவக வேலை பார்த்து வந்தார்.

"ஒரு நாள் கடும் பனிக் காலத்தில் மரங்கள் எல்லாம் கருகிப் போய் இலை யுதிர்ந்து நிற்பதைப் பார்த்தேன். பனியில் கருகிப் போன இந்தத் தாவரங்கள் எல்லாம் பிறகு புத்துயிர் அடைந்து துளிர்த்து, பூவும் காயுமாகப் பொலிவு அடையப் போவதை எண்ணித் திடீர் என்று பராசக்தியைப் பற்றி அறிவும் உணர்ச்சியும் அடைந்தேன். அது முதற்கொண்டு என் உள்ளம் கடவுளைத் தொடர்ந்து சென்றது" என்று தம்மைப்பற்றி ஒரு சமயம் சொல்லியிருக்கிறார்.

எல்லோருக்குமே ஞானோதய மாவதற்கு ஏதேனும் ஒரு நிகழ்ச்சியோ, காட்சியோ இந்த விதமாக

நிமித்த காரணம் ஆகிறது. அதுவும் ஆண்டவன் அருளே.

ஐரோப்பாவில் கிறிஸ்துவ மக்களுக்கு லாரென்ஸ் துறவி போதித்த நெறியும் பகவத் கீதை உபதேசத்தில் கண்ணன் காட்டிய வழியும் ஒன்றே என்பதைப் பார்த்து நாம் வியப்பும் பெருமையும் நிச்சய புத்தியும் அடையலாம்.

**உளன் கண்டாய் நன்னெஞ்சே**
**உத்தமன் என்றும்**
**உளன் கண்டாய் உள்குவார்**
**உள்ளத்து—உளன் கண்டாய்**
**வெள்ளத்தின் உள்ளானும்**
**வேங்கடத்து மேயானும்**
**உள்ளத்தின் உள்ளான்என் றோர் !**

இப்படி முதலாழ்வார் உபதேசித்த நெறியே கிறிஸ்துவத் துறவி லாரென்ஸ் போதித்ததும்.

"பகவான் நெருங்கி நிற்கிறான். அவனைப் பக்கத்தில் நிறுத்திக்கொண்டு அந்தரங்கத் தோழனுக்கிக் கொள். எந்தச் சமயத்திலும் அவனை உன் கண்ணுக்கு முன் வைத்துக்கொண்டு, செய்யும் எல்லாக் காரியங்களையும், எண்ணும் எல்லா எண்ணங்களையும் அவனைத் துணைவனாக வைத்துக் கொண்டு, வாழ்க்கை நடத்துவதைத் தினசரி வழக்கப்படுத்திக் கொள்" என்று ஒரு சிறந்த யோக மார்க்கத்தை லாரென்ஸ் உபதேசித்தார்.

# 2

" சர்வ வல்லமை யுள்ளவனும் உத்தம அன்பனுமான பகவானைத் துணைவனுக அமைத்துக் கொண்டு எல்லாவற்றையும் அவனுக்கு அர்ப்பண மாகச் செய். எந்தக் காரியத்தையும், சிறிய தாயினும் பெரியதாயினும், அவனிடம் அன்பு செலுத்தி அவனுக்காகச் செய்." இவ்வாறு லாரென்ஸ் துறவி உபதேசித்தார்.

எப்போதும் பகவானைப் பக்கத்தில் இடைவிடாமல் நிறுத்திக் கொள்ளும் இந்த அப்பியாசம் கீதையில் உபதேசிக்கப்பட்ட யோகமே யாகும்.

'மத்பர'னுயிருந்து 'மதார்த்தம்' எல்லாக் காரியத்தையும் என்னையே நம்பி, எனக்காகவே செய்—என்று கண்ணன் உபதேசித்ததற்கும் லாரென்ஸ் துறவி உபதேசித்த மார்க்கத்துக்கும் வேறுபா டில்லை. இரண்டும் ஒன்றேதான்.

தாம் உபதேசித்த நெறியின்படியே லாரென்ஸ் துறவி தம் வாழ்க்கையை நடத்தினர். சமையல் வேலையாயினும், பாத்திரங்கள் தேய்த்துச் சுத்தம் செய்வதாயினும் குளிப்பதாயினும் பேசுவதாயினும் தூங்குவதாயினும் எல்லாம் பகவானுடைய பிரீதிக்காக என்று கருதிச் செய்து வந்தார். அதில் அவர் பிறருக்கு விளக்க முடியாத ஆனந்தம் அடைந்து வந்தார்.

மற்றத் துறவிகளைப்போல் அவர் முகத்தில் தவத்தினால் உண்டாகும் துன்பக் குறி ஏதும் தென்படமாட்டாது. இவர் துறவி என்று யாரும் அவரைப் பார்த்தால் அறியமாட்டார்கள். பாமர மக்களின் முகத்தைப் போலவே இருந்தது அவர் முகம். பக்திக்காக எந்தத் தனி வேஷமும் அவர் போடவில்லை.

சாதாரணமாக, பக்த கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் மற்றவர்களைப்போல் பேச மாட்டார்கள். அவர்களுடைய எல்லா நடவடிக்கையும் சாதாரண ஜனங்களைப்போல் இராது. ஆனால், லாரென்ஸ் துறவியோ எல்லாரையும் போலவே இருந்தார். அவருடன் சம்பாஷித்த ஒரு பெரியவர் எழுதியிருக்கிறார் :

" அவர் ஒரு பாமரனைப் போல்தான் இருந்தார். ஆயினும், அவருடைய ஞானமும் தீவிர மேதையும் அந்தப் பாமர வெளித் தோற்றத்தை ஊடுருவிப் பாய்ந்து பிரகாசிப்பதைக் கண்டேன்."

" என்னுடைய வழிபாட்டு முறை துறவிகளுக்குத்தான் சாத்தியம் என்று எண்ண வேண்டாம். அது சாதாரண மக்களுக்கு எட்டாத ஒரு ஞான மார்க்கம் என்று எண்ண வேண்டாம். என்னைப் போலவே பகவானிடம் யாருமே காதல் கொள்ளலாம். யாருமே என்னைப்போல் பக்தியும்

செலுத்தலாம்.'' இவ்வாறு சொல்வார் லாரென்ஸ் துறவி.

"உள்ளத்தைக் குழந்தை உள்ளமாகச் செய்து கொண்டு, தாயை நாடிக் குழந்தை செல்வதுபோல் ஆண்டவனை எதற்கும் நாம் நாட வேண்டும். இது எவராலும் செய்ய முடியும். தானாக நிற்க முடியாத குழந்தை தாயைப் பிடித்துக் கொண்டு நிற்பதைப்போல், நாம் ஆண்டவனைப் பற்றிக் கொண்டு எப்போதும் நிற்க வேண்டும். குழந்தை தாயைச் சார்வதுபோல் நாம் ஆண்டவனோடு ஒன்றுதல் வேண்டும். மனம் வைத்தால் இதில் கஷ்டமில்லை. சுகமே காணலாம். இவ்வாறு செய்யாமற் போனால் உண்மையில் யாருமே சுக வாழ்க்கை அடைய முடியாது.''

## 3

**தா**யைக் குழந்தை பற்றிநிற்பதுபோல் பகவானைப் பற்றிக்கொண்டு நிற்பதுதான் சரியான வழிபாட்டு முறை. பெரியார்கள் நமக்கு வகுத்திருக்கும் பிரார்த்தனை முறையும் இதுவே. பகவானை நம்பி வாழாதவன் தன்னையும் அறியான், கடவுளையும் அறியான். மூடனாவான்.

நம்முடைய உள்ளத்தை அடைய ஆண்டவன் மிகவும் விரும்புகிறான். அவனுக்கு நாம் அர்ப்பணம் செய்யும் பொருளாகிய நம்முடைய உள்ளம்,

சுத்தமாக இருக்க வேண்டும். மனத்தைப் பாவ எண்ணங்கள் நெருங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அந்த எண்ணங்களே நமக்குப் பெரும் சத்துருக்கள். பாவ சிந்தனைகளுக்கு இடம் கொடுத்தால் அவை சீக்கிரமே பாவச் செயல்களையும் தூண்டும். அது இல்லையாயினும் அந்த எண்ணங்களினாலேயே உள்ளத் தூய்மை கெட்டுப்போகும்.

உள்ளத் துப்புரவை நாம் உண்மையில் விரும்பி ஆண்டவனை இறைஞ்சினோமானால் அவன் கட்டாயம் உதவி செய்வான். பாவ சிந்தனைகளை விலக்கலாம். அவன் வந்து நம் உள்ளத்தில் கோயில் கொள்ள வேண்டும் என்று நாம் தீவிர உணர்ச்சியுடன் விரும்பினால் நிச்சயமாக அவன் அருள்வான். பாவ சிந்தனைகளை விலக்கிவிட முடியும்.

நான் என் அனுபவத்தில் கண்டதைச் சொல்லுகிறேன். நம்முடைய எல்லாச் செய்கைகளையும் ஆண்டவனுடைய பிரீதிக்காகச் செய்து வருவதுதான் வாழ்க்கையில் சுகத்துக்கு வழி, அதுவே நன்னெறியும் ஆகும். 'பகவத் பிரீத்யர்த்தம்' அதாவது ஆண்டவனுடைய சந்தோஷத்துக்காக அனைத்தையும், சிறியதையும் பெரியதையும், செய்துகொண்டு போக வேண்டும். கீழே கிடக்கும் ஒரு துரும்பை எடுத்துப் போடுவதும் அவனுக்காக என்று செய்தால் அந்த அற்ப காரியத்தில் ஒரு தனி மகிழ்ச்சி யுண்டாகும். அவனை நாம் ஒன்றும் கேட்க

வேண்டாம். இது வேண்டும், அது வேண்டும் என்று கோராமல் அவனைக் காதலித்து அவனுடைய திருப்திக்காகவே எல்லாம் செய்துகொண்டு போக வேண்டும்.

ஆண்டவனிடம் யோசனை கேட்டும், அவனைத் தோழனாக்கிக்கொண்டு அவனோடு கலந்தும் சம்பாஷித்தும் எல்லாக் காரியங்களையும் எல்லாச் சமயத்திலும் செய்யும் வாழ்க்கை நெறியில், முதலில் கொஞ்சம் விடாமுயற்சி செலுத்த வேண்டியதாகும். செலுத்தினால் பிறகு நாம் காண்போம் அவன் இந்த முயற்சியை வெற்றி பெறச் செய்வான் என்பதை. போகப் போக நாம் காண்போம் அவனுடைய அருள் மிக வேகமாகப் பெய்து நமக்கு உதவிவருவதை.

ஒரு நல்ல காரியம் செய்யும் அவகாசம் ஏற்படுமானால் "ஆண்டவனே, நீயும் கூட இருந்து உதவினாலொழிய இதை நான் செய்து முடிக்க இயலாது" என்று ஆண்டவனுக்குச் சொல்லி இறைஞ்சுவேன். உடனே அந்தக் காரியத்துக்கு வேண்டிய ஆற்றலையும் அதற்கும் மேலேயும்கூட அடைந்துவிடுவேன். இதை என் அனுபவத்தில் அடிக்கடி கண்டிருக்கிறேன்.

ஏதேனும் தவறு செய்து விட்டேனானால், "பகவானே! நீ என்னைத் தனியாய் விட்டுவிட்டாய்.

அதனால் இப்படியாயிற்று. நீ என்னை இப்படி விட்டுவிட்டால் நான் தவறுதான் செய்வேன். இது உனக்குத் தெரியாதா ? உன்னுடைய பாடு என்று என்னைத் தனியாக விட்டுவிடாதே !" என்று ஆண்டவனிடம் சொல்லிவிட்டுக் கவலையின்றி யிருப்பேன் ; நடந்துபோன என் பிழையைப்பற்றி எண்ணி எண்ணி அலைய மாட்டேன். உள்ளத்தில் மறுபடியும் ஆண்டவன் புகுந்த பிறகு எனக்கு என்ன கவலை ?

அவன் உதவியை அருளும்படி கேட்கும்போது ஆண்டவனிடம் மோசமின்றி, கபடமின்றி, யுக்தி யின்றிப் பேசவேண்டும். உள்ளம் திறந்து பேச வேண்டும். இப்படி இறைஞ்சினால் அவன் எப்பொழுதும் அருள்வான் ; மறுத்ததை நான் என்னுடைய அனுபவத்தில் கண்டதில்லை.

## 4

சமையல் அறை வேலை எனக்குப் பிடிக்கவே இல்லை. முதலில் ரொம்ப வெறுத்தேன். ஆனால், அதை ஆண்டவனுடைய கைங்கரியமாகச் செய்து பழகிக்கொண்டு வந்தேன். அவன் கிருபையை வேண்டிக்கொண்டு பணி செய்தேன். அதனால் அந்த வேலையைச் சரிவரச் செய்ய முடிந்தது. பதினைந்து வருஷங்கள் இந்த வேலையைச் செய்தேன். கஷ்டமே தெரியவில்லை. அதன்பின் பாதரட்சை

தைக்கும் வேலையில் போடப்பட்டேன். அது எனக்கு மிக்க சந்தோஷம் தந்தது.

ஆனாலும், ரொம்பப் பிடித்தமா யிருந்த அந்த வேலையிலிருந்து நீக்கப்பட எப்போதும் தயாராகவே யிருந்தேன். எந்த வேலையும் பகவான் கைங்கரியம் என்று அவனைப் பிரீதிப்படுத்தவே செய்வது என்பது என்னுடைய சங்கற்பமாக இருந்தபடியால் பிடித்த வேலை, பிடிக்காத வேலை என்கிற வித்தியாசம் வைத்துக் கொள்ளவில்லை.

பிரார்த்தனைக் கென்று நம்முடைய மடத்தில் வேளை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் எனக்குப் பிரார்த்தனை காலம் வேறு, தொழில் செய்யும் காலம் வேறு என்பது இல்லை. எல்லாம் பிரார்த்தனை காலமாகவே வைத்துக் கொண்டேன். எந்தக் கடுமையான தேகப் பணி செய்து கொண்டிருந்தாலும் கடவுள் நினைவு விட்டதில்லை. எந்த வேலையும் பிரார்த்தனையாகவே நடைபெறும்.

சஞ்சலமான நம்முடைய மனத்தில தாமாக எழுகின்ற எண்ணங்களே நம்முடைய பரம சத்துரு. எல்லாவற்றையும் கெடுப்பது அதுவே. நம்முடைய கஷ்டங்கள் ஆரம்பிப்பது அதிலிருந்தே.

ஒரு எண்ணம் தோன்றியவுடன் ' அது பயனற்ற ஒரு எண்ணம், நாம் செய்து கொண்டிருக்கும் காரியத்துக்குச் சம்பந்தப்படாத எண்ணம்,

நம்முடைய வாழ்க்கைக் குறிக்கோளுக்கு அது ஒரு விதத்திலும் உதவாது, மோட்ச சாதகமான எண்ணம் அல்ல' என்று கண்டவுடன் அந்தச் சமயமே, ஆரம்பத்திலேயே அதை அகற்றிவிட்டுப் பகவானோடு தோழமையும் கூட்டுறவும் கொள்வதில் உள்ளத்தைச் செலுத்தவேண்டும். அந்தக் கூட்டுறவே நம்மைக் கடைத்தேற்றும். வேறு எதுவும் பயன் அற்றது.

ஆரம்பத்தில் என்னுடைய பிரார்த்தனை எல்லாம், மனத்தை வந்து தாக்கும் பயனற்ற எண்ணங்களை அகற்றும் முயற்சியாகவே இருந்தது. மனம் இங்கு மங்கும் திரியும். திரும்பத் திரும்ப அதைப் பகவானோடு உரையாடுவதில் திருப்பி இழுத்துக்கொண்டு வருவதே என்னுடைய காரியமாக இருந்தது.

மற்றவர்களைப் போல் குறிப்பிட்ட மொழிகளை வைத்துப் பிரார்த்தனையைச் செய்து முடிக்க என்னால் ஆகவேயில்லை. முதன் முதலில் வாய் திறந்து பிரார்த்தனை செய்தேன். ஆனால், என்ன காரணமோ தெரியவில்லை, அது என்னால் ஆகவில்லை. அந்த முறையை விட்டுவிட்டேன்.

## 5

அன்பைச் செலுத்தி, பகவானுடன் சங்கமத்தை அடைய வேண்டும். பகவானுக்கு அன்பு

UNIVERSITY

செலுத்துவதே தவங்களின் நோக்கம். விரதங்களின் பயனும் அதுவே. வெறுமனே தேகத்தைத் துன்புறுத்துவது தவமாகாது. இதைப்பற்றி நான் ரொம்ப யோசித்திருக்கிறேன். நான் கண்ட ஒரே முடிவு என்னவென்ருல் பகவானுக்காகவே நாம் செய்யும் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டும். இடையருமல் அவனுக்கு அன்பைச் செலுத்த வேண்டும். இதுவே அவனை அடையும் பாதை. இதுவே தவம். வேறு குறுக்கு வழி இல்லை.

தவறு ஏதேனும் செய்து விட்டேனுல் "ஆண்டவனே! பார்த்தாயா, நீயின்றி நான் ஏதேனும் செய்தால் இப்படித்தான் ஆகும்" என்பேன். நான் செய்யவேண்டியதைச் செய்து விட்டால் அது அவன் செயல் என்று அவனுக்கு வந்தனம் செலுத்துகிறேன்.

என் எண்ணம் இப்பொழுது வேறு ஏதுமில்லை, ஆண்டவன் நினைவு ஒன்றே. அதைத் தவிர வேறு எதற்கும் என் மனம் இடம் தரவில்லை. மறுக்கிறது. வேறு எந்த எண்ணமாவது நுழையப் பார்த்தால் அது உள்ளே நுழைவதற்குள் அகற்றி விடுகிறேன். இதற்கு வேண்டிய சக்தியை ஆண்டவன் இப்போது எனக்கு அருள்கின்ருன்.

அவன் அருளைப்பற்றி எனக்கு உறுதியான நம்பிக்கையினுல் சில சமயம் விளையாட்டாக நான்

வேறு எண்ணங்களை மனத்தின் வாயில் வரையிலும் விடுகிறேன். அப்போது ஆண்டவனை இறைஞ்சுவேன். உடனே என்னைக் கெடுக்க வந்த எண்ணம் இருந்த இடம் தெரியாமல் மாயமாய்ப் போகிறது.

ஏதேனும் லௌகீகப் பணி செய்ய வேண்டி நேரிட்டால் நான் அதைப்பற்றி முன்னதாக யோசிப்பதோ கவலைப்படுவதோ கிடையாது. செய்ய வேண்டிய காலம் வந்தபோது பகவான் வழியைக் காட்டி விடுகிறான். எனக்கு ஒரு சிரமமும் இல்லாமல் முடிந்துவிடுகிறது. பிறகு நடந்து போன நிகழ்ச்சிகளைப் பற்றிக் கொஞ்சமேனும் நினைப்பதில்லை. எந்தக் காரியம் செய்துகொண்டிருக்கும்போதும் என் மனம் அதைப் பற்றிக் கொண்டு நிற்பதில்லை. கவனமின்றியே காரியம் முடிந்து போகிறது. எல்லாம் அவன் செயல் அல்லவா ?.

ஆகாரம் எடுத்துக் கொண்டபின் இன்னது சாப்பிட்டேன் என்கிற நினைவு இல்லை. நான் பெரிய ஞானியல்ல. ஏதோ எனக்குத் தெரிந்த முறையில் எல்லாம் செய்துகொண்டு போகிறேன். எனக்கு வழிகாட்டும் பகவானுக்கு நன்றி செலுத்திக்கொண்டு எல்லாம் செய்துகொண்டு போகிறேன்.

# 6

துறவிகளுக்கு விதிக்கப்பட்ட தியான ஜப முறைகளை நான் கையாளும்போது, என்ன காரணமோ தெரியவில்லை, என் உள்ளம் வறண்டு போகிறது. அந்த ஜபத்திலும் தியானத்திலும் நான் சரியான பலன் அடைவதில்லை. தினசரிப் பணிகளைச் செய்யும் காலத்தில்தான் ஆண்டவனுடைய சங்கமத்தை நன்றாக அடைகிறேன்.

சிலர் கஷ்டமான விரதங்களும் பூஜைகளும் செய்கிறார்கள். ஆனால், ஆண்டவனுக்கு முக்கியமாகச் செலுத்தவேண்டியது அன்பு. அதை மறந்துவிடுகிறார்கள். பகவான் விரும்புவது நமது அன்பு. அது இல்லாமற் போனால் எந்த விரதமும், பூஜை கிரியையும் பயனற்றுப் போகிறது.

படிப்பினால் அடைந்த சாஸ்திர ஞானம் நமக்கு ஆண்டவனுடைய தரிசனத்தைத் தராது. உள்ளத்தில் காதல் பொங்க வேண்டும். அவனல்லது வேறொன்றும் எனக்கு வேண்டாம், அவனைக் காண்பதே என் உயிருக்கு அமுதம் என்று உள்ளத்தில் ஆசை பொங்க வேண்டும்.

ஆண்டவனிடம் நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்காத எந்தப் பொருளையும் காரியத்தையும் ஒரே அடியாக விட்டு விடுவதே துறவு. அப்படித் துறந்துவிட்டால் ஆண்டவனை மனத்தில் இடை

விடாமல் அனுபவித்துக் கொண்டிருக்கலாம். இது வெறும் பேச்சோ, மிகைப்படுத்திச் சொல்வதோ அல்ல. பகவான் நம் அண்டையிலேயே இருக்கிறான். எந்த நிமிஷமும் அவனை நாடி, அவன் உதவியையும் உறவையும் பெறலாம். உள்ளத்தில் ஏதேனும் சந்தேகம் எழுந்தபோது உன் திரு உள்ளம் என்னவோ என்று கேட்டுத் தெரிந்து கொள்ளலாம்.

அவன் திருவுள்ளம் என்னவென்று அறிந்த பின் சந்தோஷமாக அதைச் செய்யலாம். 'இது உன் காரியம். இதன் பயன் உனது' என்று எதையும் ஆரம்பிக்க வேண்டும். முடிந்தபின் 'உன்னருளால் நடந்தது' என்று அவனுக்கு அர்ப்பணம் செய்துவிட வேண்டும்.

முக்திக்காகச் செய்யவேண்டிய கிரியையோ கர்மமோ வேறே கிடையாது. நமக்காக நாம் செய்யும் தினசரிக் காரியங்களை யெல்லாம் அவனுக்கு என்று அவனை எண்ணிச் செய்வதே முக்திக்கு மார்க்கம். பக்தி செய்வது என்று ஆரம்பித்து, அதற்காகச் சில தனிக் கிரியைகளை அமைத்துக்கொண்டு பக்தியை மறந்துவிட்டு அந்தக் கிரியைகளில் கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள். அவற்றையும் சரியாகச் செய்ய முடியாமல் போகிறது. இது வருந்தத் தக்கது. மற்றவர்களைத் திருப்திப் படுத்துவதற்காகவோ, அவர்களுடைய நன் மதிப்பை

அடைவதற்காகவோ எந்தக் கிரியையும் செய்ய வேண்டியதில்லை. சாதாரண வாழ்க்கை அலுவல்களையே ஆண்டவனுடைய பிரீதிக்காக, பக்தி செலுத்திச் செய்தோமானால் அதுவே பகவானை அடையும் வழி. இது என்னுடைய அனுபவத்தில் நான் கண்ட உண்மை. சந்தேகமே கிடையாது.

## 7

**வா**ழ்க்கைக்கு வேண்டியதைச் செய்வதற்கு ஒரு காலமும், பிரார்த்தனைக்கென்று தனியாக ஒரு காலமுமாகப் பிரித்து அமைத்துக் கொள்வது அறியாமை. எல்லாக் காலத்திலுமே ஆண்டவனுடைய தோழமையை நாடவேண்டும். தொழுங் காலத்திலும் சாதாரணத் தொழிலில் செலவழிக்கும் காலத்திலும் இரண்டிலுமே அவன்பால் உள்ளத்தைச் செலுத்த வேண்டும்.

அருகிலிருக்கும் பகவானை, இருக்கிறான் என்று கண்டு அந்த உணர்ச்சியை மனத்தில் கரையாமல் நிறுத்திக் கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்வதே என்னுடைய பிரார்த்தனை முறை. அந்த முயற்சியில் வெற்றி யடைந்து பகவானுடைய சாந்நித்தியத்தை அடையும்போது, வேறு ஏதும் என் உணர்வில் இடம் பெருமல் அன்பு ஒன்றே நிற்கிறது. மற்றவை யனைத்தும் கரைந்து போய் விடுகிறது.

சின்னஞ் சிறு பணிகளை யெல்லாம், பகவத் பிரீதிக்கென்று செய்ய வேண்டும். அதில் தெவிட்டு அடைய லாகாது. ஆண்டவன் வேண்டுவதும் மதிப்பதும் அவன்பால் நாம் செலுத்தும் அன்பைத்தான். எந்தப் பணி என்பது முக்கியமல்ல அவன்மேல் எவ்வளவு பிரீதி வைத்துச் செய்யப்பட்டது என்பதைத்தான் அவன் பார்ப்பது. ஆஸ்திகனுக்கு உரிய குணங்கள் மூன்று. ஒன்று, உறுதியான நம்பிக்கை; இரண்டாவது, பகவானுடைய கருணையை ஆசையோடு எதிர்பார்ப்பது; மூன்றாவது, பகவானையே காதலித்துக் கவலையற்றிருப்பது.

இவற்றில் முதல் குணம் ஒன்றிருந்தாலே எல்லாம் அடையலாம். இரண்டாவதும் இருந்தால் எளிதில் சித்தி யடையலாம். மூன்று குணங்களும் இருந்து, அவற்றை இழக்காமல் காத்துவந்து வாழ்க்கை நடத்தினோமானால் சொல்ல வேண்டியதே இல்லை, நிச்சயமாகச் சித்தியடைவோம்.

பக்தி செய்து உய்யப் பெறவேண்டும் என்று தீர்மானித்தோமானால் முதலில் நம்மை நாம் நன்றாகச் சோதித்து பார்த்துக்கொள்ள வேண்டும். அப்போது நாம் காண்போம், நாம் எவ்வளவு அற்பர்கள், எவ்வளவு நீசர்கள் என்று. பகவானை நெருங்கும் தகுதி நமக்குக் கொஞ்சமும் இல்லை என்பதைக் காண்போம். ஆண்டவன் நம்முடைய ஆணவத்தைக்

கரைத்து நம்முடைய சித்த மலங்களை அறுவித்து நம்மை ஓரளவு தகுதிபெறச் செய்வதற்காக நமக்குச் சில துன்பங்களைத் தந்தும் சோதனை களுக்கு உள்ளாக்கியும் வருவதன் காரணத்தை அப்போது நாம் காண்போம். துன்பங்கள் பல வற்றை உள்ளத்திலும் புறத்திலும் அனுபவித்த பின்னரே நாம் புனித மடைவோம். ஆனபடியால் தான் பல கஷ்டங்களும் மக்களின் விரோதங்களும் தடைகளும் எதிர்ப்புகளும் பக்தர்கள் அடை கிறார்கள், அதற்காகக் கவலைப்பட லாகாது. அவை யெல்லாம் ஆண்டவன் நமக்குச் செய்யும் உதவி என்று உணர்ந்து மகிழ்ச்சி அடைய வேண்டும். அவனுடைய திருவுள்ளம் என்று துன்பத்தை வரவேற்றுப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

## 8

நம்முடைய மடமையை என்னவென்று சொல்வது ! கொஞ்ச நேரம் பக்தி செலுத்திவிட்டு, போதும் என்று திருப்தியடைந்து விடுகிறோம். பெரிய வெள்ளமாக வருகிறது பகவானுடைய கருணை. நம்முடைய அறியாமையால் அதை நாம் அணைகட்டித் தடுத்துவிடுகிறோம். இந்த அணைத் தடையை உடைத் தெறிந்தோ மானால் ஆண்டவனுடைய கருணையானது பிரவாகமாகப் பெருகும். கருணைப் பிரவாகத்துக்கு வழியடைக்

கிறோம். இனி அப்படிச் செய்யாமல் அருள் வெள்ளத்தில் குடைந்து குளிப்போமாக. துறவிகளாகிய நாம் இனித் தூங்க லாகாது. முன்சென்று அவன் அருளைப் பெறுவிட்டால் நாம் கெட்டுப் போவோம். ஏறும் மலையிலிருந்து கீழே விழுந்து அழிந்து போவோம்.

உள்ளமானது காற்றில் அடிபட்டுத் தள்ளாடும் கப்பலைப் போல் அலைபடும்போது நம் உள்ளத்தில் தூங்கும் ஆண்டவனை எழுப்புவோமாக. எல்லாப் புயலையும் அடக்கும் வல்லமை அவனுக்கு உண்டு. நம்முடைய சித்தத்தில் உறங்கும் ஆண்டவனை எழுப்பினோமானால் மரக்கலம் கஷ்ட மின்றிச் செல்லும்.

உள்ளத்தை ஆண்டவனுக்குத் தந்துவிட வேண்டும். இதயத்தில் வேறு ஏதுமில்லாமல் காலி யாக்கினால்தான் ஆண்டவன் அதைத் தன் கோயிலாக்கிக் கொண்டு குடியிருப்பான். அவனன்றி வேறு விஷயம் இதயத்தில் இருந்தால் அவன் அந்த 'ஒட்டுக்குடி'க்கு ஒப்பமாட்டான். முழு இதயத்தையும் துப்புரவாகத் தனக்குத் தர வேண்டும் என்று அவன் விரும்புகிறான். நம் இதயத்தை முற்றிலும் அவனுக்கே விட்டுவிட்டால் தான் நான் சொல்லும் **சதா தரிசன முறையைக்** கையாள முடியும். தெய்வ தரிசனத்துக்குச் சாராத விஷயங்கள் உள்ளத்தில் இருக்கலாகாது.

பகவானைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்தும் முறையை நான் எல்லோருக்கும் உபதேசித்து வருகிறேன். இதைப் போன்ற சுக வாழ்க்கை வேறு கிடையாது. அதில் உண்டாகும் மகிழ்ச்சிக்கு ஈடு வேறு ஏதுமில்லை. ஆனால், இதை நான் உபதேசிப்பது மகிழ்ச்சிக்காக அல்ல. பயனை எதிர்பாராமல் பகவானிடம் அன்பு செலுத்த வேண்டும். அதைத்தான் அவன் விரும்புவது. அதுதான் நம்முடைய கடமை.

சாந்நித்திய உபாசனத்தை வாழ்க்கை முறையாகவே செய்துகொள்ள வேண்டும். இதுவே என்னுடைய உபதேசம். இதைச் செய்தால் வேறு எந்த உபதேசமும் மக்களுக்கு வேண்டியதில்லை. துறவிகளுக்கும் சாதாரண மக்களுக்கும் இது பொருந்தும். இதுவே எளிய முறையுமாகும்.

## 9

**ப**கவானை நாடும் பக்தன் வேறு எவ்வித மகிழ்ச்சியையும் தேட மாட்டான். தேட வேண்டிய அவசியமு மில்லை. ஆண்டவன்பால் செலுத்தும் அன்பிலேயே பக்தன் பூரண ஆனந்த மடைகிறான். வேறு காரியங்களையும் சந்தோஷங்களையும். தேடும் சுதந்திரம் பக்தனுக்கு உண்டு. பக்தி மார்க்கத்தில் கட்டாயத்துக்கு இடமில்லை. ஆனால், சுதந்திர

மாகவே வேறு அலுவல்களைப் பக்தன் விட்டு விடுவான். பகவானுடைய சாந்நித்யத்தை சதா அடைந்து அந்த மகிழ்ச்சியே அவன் உள்ளத்தில் நிரம்பி நிற்கும்.

பக்தன் வாழ்க்கையலுவல்களைக் கவனிக்காமல் விட்டுவிட மாட்டான். நன்றாகவே கவனிப்பான். கவலையின்றி வருத்தமின்றிச் செய்ய வேண்டியதை யெல்லாம் செய்துகொண்டு போவான். ஆனால், அந்தராத்மாவில் பகவானை வைத்துக் கொண்டே எல்லாம் செய்வான். மறந்து போன போது உடனே திரும்ப நினைவுக்குத் தந்து கொள்வான்.

நித்ய வைதிக கர்மங்களைக்கூட அவ்வளவாக மதிக்கமாட்டான். சாந்நித்தியத்தை அப்பியாசம் செய்கிறவனுக்கு ஜபமும் மந்திரமும் வேண்டியதே யில்லை. சாதனங்களின் பயனை அடைந்தவன் சாதனத்தை ஏன் கட்டிக் கொண்டு அலைய வேண்டும் ?

## 10

பகவான் நம்மை அதிகம் கேட்கவில்லை. அவ்வப்போது அவனை நினைவுக்குத் தந்து கொண் டால் போதும். அவ்வப்போது அவனுக்கு வணக்கம் செலுத்தினால் போதும். கவலைகள்

உண்டானபோது அவன் அருளுக்காக இறைஞ்ச வேண்டும். அவ்வளவே. கஷ்டம் அனுபவிக்கும் போது, "ஐயனே! இது உனக்காகப் பொறுக்கிறேன்!" என்று சந்தோஷமாகப் பொறுத்தால் போதும். சுகம் நேர்ந்தால், எப்போதாவது சில சமயமேனும் அவனைத் தியானித்து, அடைந்த சுகத்திற்கு நன்றி செலுத்தினால் போதும். சங்கடமடைந்த காலத்தில் அவனைக் கருத்தில் வைத்து, "நீ இருக்கிறாய், எனக்கு என்ன கவலை?" என்று எண்ணினால் போதும். உண வருந்தும் போதும் நண்பர்களுடன் கலந்து காலங் கழிக்கும் போதும் அவ்வப்போது அவனை நினைவுக்குத் தந்துகொண்டு, 'உத்தமத் தோழனே! நீ பக்கத்தி லிருக்கிறாய்' என்று எண்ணினால் போதும். கொஞ்சம் நினைத்தாலும் அவனுக்கு மிகத் திருப்தி.

பிரார்த்தனையின் பொழுது, 'ஆ!' என்று கதறிக் கூப்பிட வேண்டியதில்லை. பகவான் அருகிலேயே இருக்கிறான். தூரத்தில் இல்லை. மிக அண்மையில் எப்போதுமே இருக்கிறான். பெரிய மதிற் சுவர் கொண்ட கோயிலில் அவனில்லை. உள்ளத்திலேயே இருந்து வருகிறான். உன் உள்ளமே ஒரு சிறு கோவில். வேறு எங்கேயும் தேடிப் போக வேண்டியதில்லை. இருந்த இடத்தில் அவனை அடையலாம். யாரும் அறியாமல் மெதுவாக அடக்கமாக, பிரியமாக அவனுடன் பேசலாம். எல்லாருமே இந்தச் சாந்நித்தியத்தை அடையக்

கூடும். நம்முடைய தார தம்யமும் சக்திக் குறைவும் அவனுக்குத் தெரியும். அதை அனுசரித்து அவன் அருள்வான்.

## 11*

"காலதாமதம் செய்யலாகாது. நமக்காக அவன் காத்திருக்கிறான். தைரியமாக அவனை அடையும் முயற்சியை ஆரம்பிக்கலாம். உனக்கு வயது அறுபத்துநாலாயிற்று. எனக்கு எண்பது முடிந்தது. இனிமேல் தாமதம் செய்யலாகாது. இனி நமக்கு இருக்கும் காலத்தை அவன் அருகில் முடிக்கலாம்.

இந்த முறையை அப்பியாசம் செய். கொஞ்சம் கொஞ்சமாகப் பயிற்சி யடைவாய். ஆண்டவனை வணங்கி அவன் அருளுக்காக இறைஞ்சுவாய். உள்ளத்தை அவனுக் கென்றே கொடுத்து விடு. பகல் வேளையி லாயினும் சரி, இரவி லாயினும் சரி, வேலை செய்துகொண்டிருக்கும்போதும் சும்மா யிருக்கும்போதும், சாத்தியமான வரையில் நான் சொன்ன முறையில் பகவானை மனத்தில் நிறுத்திக் கொண்டிருப்பாய். அடக்கத்துடன் இப்படிச் செய்து வந்தால் மற்ற விரதங்களை வைத்துக் கொண்டு வீணுகக் கஷ்டப்பட வேண்டிய தில்லை. பக்தியுடன் தைரியமாக இந்த முறையை அனுசரிப்

* இது மற்றொரு துறவிக்கு எழுதிய கடிதம்

பாய். ஆண்டவனுக்கு உன்னுடைய அன்புதான் வேண்டும். ஜபங்கள் அல்ல. உபகரணங்கள் அல்ல.

தியானம் செய்யும்போது உண்டாகும் தடைகளைப் பற்றிச் சொல்லுகிறாய். நீ சொல்லுவதில் ஒன்றும் புதியதில்லை. எல்லோருக்குமே இம்மாதிரித் தியானத்தில் தடை ஏற்படுகிறது. இந்த இடைஞ்சல் உனக்கு மட்டுமல்ல. மனத்தை ஒருமுகமாக நிறுத்துவது கஷ்டம். இங்குமங்கும் அலையும். அதன் இயற்கைக் குணம் இது. ஆனால், அதை அடக்கி யாளும் சக்தி நமக்கு உண்டு. அது எங்கு சென்றாலும் அதைப் பிடித்து இழுத்துத் திருப்பிக் கொண்டு வரவேண்டும். 'உன் குறிக்கோள் ஆண்டவன். அதை விட்டுவிட்டு எங்கே போகிறாய்?' என்று அதற்குச் சொல்லித் திரும்பத் திரும்பப் பிடித்துப் பிடித்து நிறுத்த வேண்டும். இங்கும் அங்கும் அலையவிடாமல் இழுத்துப் பிடித்து நிறுத்திக் கொள்ளவேண்டும்.

வழக்கம் பொல்லாதது. அலையும் வழக்கத்திலிருந்து மனத்தைத் திருத்துவது கடினம். நம் இஷ்டத்துக்கு விரோதமாகவே அது இங்குமங்கும் ஓடும். தியானம் செய்யும்போது, ஆண்டவனை விட்டுவிட்டு, உலக விஷயங்களை நினைத்துக் கொண்டு திரியும். இதற்கு மருந்து நான் கண்டது ஒன்றே. இந்தப் பிழையைப் பகவானுக்குச்

சொல்லி ஒப்புக்கொண்டு அவன் பாதத்தில் விழுந்து அழுவது ஒன்றே அதற்கு மருந்து.''

## 12

பிரார்த்தனை செய்யும்போது நீண்ட பிரசங்கத்தில் இறங்க வேண்டாம். பேச்சும் பிரசங்கமும் என்னத்துக்கு? கால் இழந்த ஊமைப் பிச்சைக்காரன் ஒருவன், பணக்காரன் வீட்டு வாயிலில் பிச்சைக்குக் காப்பதுபோல் ஆண்டவனுக்குப் பிரார்த்தனை செலுத்து. ஈசன் சந்நிதியில் மனத்தை நிறுத்துவது ஒன்றே கவனத்தில் வை. அவனை விட்டு மனம் எங்கும் சென்றுவிடாமல் பார்த்துக் கொள்.

மனம் அலையும்போது அதைப்பற்றிக் கவலைப் பட்டு நிலை இழந்துவிட வேண்டாம். அது உதவுவதில்லை. அதனால் இன்னும் கவனக் கேடு உண்டாகும்.

உள்ளத்துக்கு மெதுவாகச் சொல்லித் திரும்பவும் சந்நிதானத்தில் நிறுத்து. இப்படி முயற்சித்தால் ஆண்டவனுடைய அருளைப் பெறுவாய்.

பிரார்த்தனைக் காலத்தில் மனம் நிலையில் நிற்க வேண்டுமானால் மற்றக் காலங்களிலும் பகவானை நினைவில் வைத்திருக்க அப்பியாசம் செய்ய வேண்டும். எப்போதுமே மனம் பகவானை நோக்கி நிற்கப் பயில வேண்டும். இவ்வாறு விடாமுயற்சியுடன் பழகிக் கொண்டால் பிரார்த்தனைக் காலத்

தில் மனம் நிலையில் நிற்கும். நிலை தவறினாலும் திரும்ப நிலைக்கு வருவது எளிதாகும். பழக்கத்தினால் ஆகாதது ஒன்றுமில்லை.

இந்த உலகத்தில் படு குழிகளுக்குக் கணக்கில்லை. எப்போதும் ஆண்டவனைப் பக்கத்திலேயே நிறுத்திக் கொண்டால்தான் அவற்றில் விழாமல் தப்புவோம்.

இடை விடாமல் பிரார்த்தனை செலுத்த வேண்டுமென்றால் எங்கேயோ தூரத்தில் ஆண்டவனை வைத்துக் கொண்டால் முடியாது. பக்கத்தில் நிறுத்திக் கொள்ள வேண்டும். அவனைத் தியானித்தால் அல்லவோ இது சாத்தியமாகும். தியானிப்பதற்கு இடைவிடாத அப்பியாசம் வேண்டும்.

ஒரு விஷயத்தையே நான் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறேன் என்பாய். உண்மை. இது ஒன்றே எனக்குத் தெரிந்தது. வேறு வழியை நான் காணவில்லை. நான் கையாண்டு வரும் முறையும் இது ஒன்றே. இதைத்தான் நான் மற்றவர்களுக்கும் சொல்லுகிறேன். வேறு என்ன செய்ய முடியும்?

## 13*

"நான் சொன்னதை மறக்க வேண்டாம். பகலிலோ இரவிலோ, என்ன செய்துகொண்

* இதுவும் ஒரு கடிதம்.

டிருந்த போதிலும், எந்தக் காரியத்தில் ஈடுபட்டிருந்தாலும் சரி, வேடிக்கை விஷயங்களில் காலம் கழிக்கும் போதும் சரி, ஆண்டவனை நினைவில் வைத்துக் கொண்டே எல்லாம் செய். அவன் எப்போதும் பக்கத்தி லிருக்கிறான். அவனை உதாசீனம் செய்யாதே!

உன்னைப் பார்க்க வந்த ஒரு நண்பனை, நீ உதாசீனம் செய்ய மாட்டா யல்லவா? நண்பர்களுக்குள் உத்தம நண்பனை, பகவானை உதாசீனம் செய்யலாமா? அவனை மறக்காதே! நாம் எந்தத் துறையில் விரதம் எடுத்துக் கொண்டிருக்கிறோமோ, அந்தத் துறையில் செய்ய வேண்டியதை நன்றாகச் செய்யவேண்டுமல்லவா? அறியாததை அறிந்து கொள்ள வேண்டுமல்லவா? பழகாததைப் பழக வேண்டும். உனக்காக நானும் ஆண்டவனை இறைஞ்சி வருகிறேன். மனத் தளர்ச்சி வேண்டாம்.

உன் நோய் தீர்ந்து சுகம் பெற வேண்டு மென்று நான் பிரார்த்திக்க வில்லை. நோயைப் பொறுக்கும் சக்தி உனக்கு ஆண்டவன் அருள வேண்டு மென்றே நான் பிரார்த்தனை செய்கிறேன். அவனுடைய உள்ளம், உனக்கு நோய் தீர வேண்டு மென்றிருந்தால் அது தீரும். பொறுத்துக் கொள்ளும் சக்தி நீ பெறவேண்டும் என்று பிரார்த்தனை செய்கிறேன். நோயைத் தந்தவன் பொறுத்துக் கொள்ளும் சக்தியும் தருவான்.

அவன் இட்டபடி எல்லாத் துன்பத்தையும் பொறுத்துக்கொள்ள வேண்டும். அதற்கு உன் உள்ளத்தைப் பழக்கிக் கொள். அதற்கு வேண்டிய ஆற்றலைத் தரும்படி பகவானை வேண்டிக்கொள். நமக்கு வரும் நோய் துன்ப மன்று. ஆண்டவன் நம்மை மேல்தூக்கவே அவற்றைத் தருகிறான்.

இதை உணராதபடியால் மக்கள் கஷ்டப்படுகிறார்கள். துறவிகளாகிய நாம் உணர வேண்டும். 'நம்முடைய குணங்களையும் ஆற்றலையும் நல் வழியில் வளர்க்கவே இந்த நோய் வந்திருக்கிறது. இது ஆண்டவனுடைய அருள்' என்று வரவேற்றுப் பொறுத்துக் கொண்டு நன்மையை அடைய வேண்டும். நாம் சுகங் கெட்டு, நோய்ப் பட்டுக் கிடக்கும்போதே ஆண்டவன் நம்மை மிக நெருங்கி நிற்கிறான். சுகமாக இருக்கும்போது நாம் அவனை விட்டு விலகி நிற்கிறோம். நோய்ப் பட்ட போதே அவன் இருப்பது நினைவுக்கு வருகிறது.

அவனே வைத்தியன். அவனைத் தவிர வேறு வைத்தியனைத் தேடாதே! அவனை முற்றிலும் நம்பு. நம்பினால் நலனைப் பெறுவோம். அவனை மறந்து, மருந்துகள் அருந்தி நோயை நீடிக்கச் செய்கிறோம். எந்த மருந்து யார் கொடுத்து நாம் அருந்தினாலும் அவன் இச்சையின்றி அந்த மருந்து ஆரோக்கியம் தராது. அவன் அனுப்பிய நோயை

அவனே தீர்ப்பான். உடலுக்கு வந்த நோய், உயிருக்கு நன்மை தரும். அதற்காகவே அவன் நமக்கு நோய் தருவது.

காதலன் தரும் துன்பம் துன்பமாகாது. அன்பே வலியைத் தீர்க்கும். ஆண்டவனைக் காதலித்தோமானால் அவன் தந்த வலியும் நோயும் மறைந்துபோகும். காதலன் தந்த வலி என்று உணர்ந்தோமானால், வலி மறைந்துபோகும். காதலன் தரும் துன்பம் இன்பமே யாகும். என் பேச்சைத் தட்டாதே! பிரார்த்தனை செலுத்து. நானும் உனக்காகப் பிரார்த்தனை செய்வேன். என்னாலாவது கொஞ்சமே. ஆயினும், அதைச் செய்கிறேன்."

## 14*

"பகவானுக்கு எல்லாம் தெரியும். நமக்கு என்ன செய்ய வேண்டும் என்பதை அவன் அறிவான். அவனுடைய அன்பு மெய் யன்பு. அதன் அளவை நாம் அறியவில்லை. அவனே நமக்கெல்லாம் ஆப்த சிநேகிதன். நம்முடைய உண்மை நலனை அவன் அறிந்தவன். இதை உணர்ந்தோமானால் இன்பம் துன்பம் இரண்டையும் அவன் தந்தவை என்று பொறுத்துக் கொள்வோம். துன்பம்

*இதுவும் ஒரு கடிதம்.

என்று எண்ணி நாம் வருத்த மடைகிறோம். உண்மையை உணர்ந்தால் வருத்தப்பட மாட்டோம். நம்மைத் துன்பப்படுத்தித் தூய்மைப் படுத்தவே அவன் துன்பங்கள் அருள்கிறான்; நோயும் துயரமும் தருகிறான். அவன் நம்முடைய பிரிய முள்ள தந்தை என்பதை உணராமல் அவனுடைய அருளை நோயாகக் கருதுகிறோம். அவன் அன்பை உணர்ந்தோ மானால் துன்பமும் துயரமும் இன்பமாகும்.

பகவான் எங்கேயோ தூரத்தில் இல்லை. நம்மிடையில் இருக்கிறான். மிகச் சமீபத்தில் இருக்கிறான். அவனைத் தேடி அலையவேண்டிய தில்லை. உன்னுடைய நோய் தீர்ந்தது என்று அறிந்து மிக மகிழ்ச்சி யடைந்தேன். நான் அவனைச் சீக்கிரமே அடைவேன். தரிசனம் மிக அண்மையி லிருக்கிறது என்று தோன்றுகிறது. சில நாட்களில் அவன் பாதம் அடைவேன். எனக்காக நீயும் உனக்காக நானும் பிரார்த்தனை செலுத்துவோமாக.”

இந்தக் கடிதம் எழுதிய வாரத்தில் துறவி லாரென்ஸ் தேக வியோகம் அடைந்தார்.

★

சம்பா வெளியீடு :

# ராஜாஜி

எழுதிய

# கை விளக்கு

பகவத் கீதை முழுவதும்: ராஜாஜி யின் மொழிபெயர்ப்பும், விரிவான விளக்கமும். எளிய தமிழில் ராஜாஜியின் அரிய குறிப்புக்கள்.

சம்பா நூலகம்
59, பிராட்வே,
சென்னை-1.

## எமது அடுத்த வெளியீடுகள்

ராஜாஜி எழுதிய

மலிவுப் பதிப்புக்கள்

# சக்கரவர்த்தித் திருமகன்

[இரண்டாம் பதிப்பு]

# ராஜாஜி கதைகள்

# ராஜாஜி கட்டுரைகள்

*


## சம்பா நூலகம்

59, பிராட்வே :: சென்னை - 1.

Wrapper Printed at Neo Art Press, Madras-2